அசல்

21.9.1916 வ. உ. சிதம்பரம்.

அசல் -1 ✓ நகல் -1

V. O. Chidambaram Pillay.

2
சிவமயம்

பெரம்பூர், சென்னை.
21 - 9 - 1916.

எனது ஐயா அவர்களே,

வந்தனம். க்ஷேமத்திற்குப் பிரார்த்திக்கிறேன். தங்கள் கார்டு வரப்பெற்றேன். அச்சிற்குக் கொடுப்பதற்காகப் பொருத்து செய்யப்பட்டுவரும் தொல் - இளம் - களவியல் பிரதியை பெற்றவுடன் அதனைத் திருத்திக்கொண்டு வருகிற மனிதனைத் தங்களிடம் அனுப்ப வேண்டுமென்று எழுதியிருந்ததாகவும் நினைத்தேன். ஆனால், அது இன்னும் முடிவுபெறவில்லை. வருகிற ஞாயிறுக்குள் முடிவுபெறுமென்று நம்புகிறேன். திங்களில் அவ்வது செய்வாயில் அது தங்கள்பால் வந்து சேரும். தாங்கள் பார்த்து முடிவுபெற்றுள்ள தொல் - இளம் - அகத்திணையியல், புறத்திணையியல்களை இது கொண்டுவருகிற மனிதன் மூலமாக அனுப்பலாம். 'புறத்திணையியல்' வேண்டுமென்றால், இன்னும் சில நாட்கள் தங்களிடம் இருக்கலாம். அகத்திணையியலை அச்சிற்குக் கொடுக்க எழுதியுள்ளேனாதலால் அதனை மாத்திரம் தற்சமயம் அனுப்பினால் போதுமானது. 'களவியலைத்' தங்களுக்கு அனுப்பாமல், தங்களிடமுள்ளவற்றைப் பெற எனக்கு மனமேயில்லை. தொல்காப்பியத்திற்குக் காகிதம் வாங்கிவிட்டேனாதலாலும், அச்சியந்திரசாலையார் அதனை அச்சிடத் தொடங்கச் சித்தமாயிருப்பதாலுமே, அகத்திணையியலைப் பெற்றுவர இம் மனிதனை இன்று அனுப்புகின்றேன்.

தங்களிடம் நன்றியறிதலுள்ள,

வ. உ. சிதம்பரம்

அசல்

21.9.1916 வ.உ. சிதம்பரம்

அசல்-1 ✓ நகல்-1

(1)

நகல்

228

V.O. Chidambaram Pillai 2

பெரம்பூர், சென்னை
21-9-1916

சிவமயம்

கனம் ஐயா அவர்கட்கு

க்ஷேமம். க்ஷேமத்திற்குப் பிரார்த்திக்கிறேன். தங்கள் கார்டைப் பெற்றேன். தொல் - இளம் - சொல்லியல் பூர்த்தி முடிவு பெற்றவுடன் அதனை எழுதிக்கொண்டு வருகிற மனிதனைத் தங்களிடம் அனுப்ப வேண்டுமென்று கருதி இதுகாறும் தாழ்த்தேன். ஆனால் அது இன்னும் முடிவு பெறவில்லை. வருகிற ஞாயிறுக்குள் முடிவு பெறுமென்று நம்புகிறேன். தங்களில் அல்லது செவ்வாயில் அது தங்கள்பால் வந்து சேரும். நாங்கள் பார்த்து முடிவு பெற்றுள்ள தொல் - இளம் - அகத்திணையியல் புறத்திணையியல்களை எழுதிக்கொண்டு வருகிற மனிதன் மூலமாக அனுப்பலாம். புறத்திணையியல் வேண்டுமென்றால் இன்னும் சில நாள்கள் தங்களிடம் இருக்கலாம். அகத்திணையியலை அச்சிற்குக் கொடுக்கக் கருதியுள்ளேனாதலால் அதனை மாத்திரம் தற்சமயம் அனுப்பினால் போதுமானது. களவியலைத் தங்களுக்கனுப்பாமல் தங்களிடமுள்ளவற்றைப் பெற எண்ணக் கூடுமேயில்லை. தொல்காப்பியத்திற்குக் காகிதம் வாங்கிவிட்டேனாதலாலும் அச்சியந்திரசாலையார் அச்சிடத் தொடங்கச் சித்தமாயிருப்பதாலுமே அகத்திணையியலைப் பெற்றுவர இம்மனிதனை இன்று அனுப்பினேன்.

தங்களிடம் நன்றியறிந்துள்ள
வ.உ. சிதம்பரம்

நகல்

18 197

21—9—1916

வ.உ.சிதம்பரம் பிள்ளை

136

Copied.
[illegible] vol IV.
P - 303 - 04

86

1317